# கோட்டாபய, மஹிந்த, பஸில் அடிப்படை உரிமையை மீறினர்!

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு



நாட்டில்நெருக்கடிநிலையைஏற்படுத்தியதன் ஊடாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்டோர் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக உயர்நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு அவர்கள் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென இரண்டு அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த மனுக்களை விசாரித்த, ஐவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாமின், பெரும்பான்மையான நீதியரசர்களின் தீர்மானத்துக்கமைய இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

(அ)

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 27 செவ்வாய்க்கிழமை 14.11.2023 கதிர் 112

A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்



## இஸ்ரேலுக்கு எதிராக 159 எம்.பிக்கள் போர்க்கொடி!

### ஐ.நா. நடவடிக்கை எடுக்கக் கோரி மகஜர் கையளிப்பு

பலஸ்தீன் - காஸாவில் மனிதாபிமானமற்ற முறையில் இஸ்ரேல் முன்னெடுத்து வரும் மனிதப் படுகொலையையும், கொடூர தாக்குதல்களையும் உடனடியாக நிறுத்த ஐ.நா. பாதுகாப்புச் சபை தலையிடுமாறு கோரி 159 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்ட மகஜர், இன்று காலை கொழும்பில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் கையளிக்கப்பட்டது. 2➤

## ஸ்ரீலங்கா கிரிக்கெட் விசாரணையில் இருந்து விலகிய நீதியரசர் நிஷங்க

ஸ்ரீ லங்கா கிரிக்கெட் இடைக்கால நிர்வாகத்தின் செயற்பாடுகளை இடைநிறுத்துவதற்கான, இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணையில்இருந்துமேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் நிங்க பந்துல கருணாரத்ன இன்று விலகியுள்ளார். 2➤

## இலங்கைக்குத் தென்கிழக்கே நிலநடுக்கம்!



இந்தியப் பெருங்கடலில் இலங்கைக்கு தென்கிழக்கே 800கிலோமீற்றர்தொலைவில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் 6.1 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் இலங்கைக்கு ஆபத்து எதுவும் இல்லை எனவும் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.



## கொழும்பு வீதிகளின் இருபுறமும் 300 மரங்கள் ஆபத்தான நிலையில்!

### அமைச்சர் பிரமித பண்டார எச்சரிக்கை

கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகளின் இருபுறமும் உள்ள சுமார் 300 மரங்கள் ஆபத்தான நிலையில் இருப்பதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக 15 மாவட்டங்களின் 158 பிரதேச செயலகப் பிரிவுகளில் 9,280 குடும்பங்களைச் சேர்ந்த 34,348 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், 550 குடும்பங்களைச் சேர்ந்த 1,951 பேர் நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள 29 பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். 2➤

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான நட்ட ஈடு இதுவரை செலுத்தப்பட்ட தொகை விபரம்

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான வழக்கில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர உள்ளிட்ட தரப்பினரால், இதுவரை 3 கோடியே 68 இலட்சத்து 25 ஆயிரத்து 88 ரூபாய் நட்டஈடாக வழங்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இன்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் காவிந்த ஜயவர்தன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக்குழுவினால் விசாரணை நடத்தப்பட்டு, அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பொலிஸாரும் விசாரணை மேற்கொண்டு, சட்டமா அதிபருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

சட்டமா அதிபர் இவை தொடர்பாக ஆராய்ந்து, 42 குற்றப்பத்திரிகைகளை கொழும்பு உயர்நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார். 79 பேர் குற்றவாளிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். சிலருக்கு நிபந்தனையுடன் பிணை வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்றம் மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் சில அதிகாரிகள் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எனினும், இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் நீதி அமைச்சுக்கு கிடையாது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 100 மில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்க வேண்டும் என உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது. இந்தத் தொகையில் 15 மில்லியன் ரூபாவை இதுவரை அவர் செலுத்தியுள்ளார்.

அதேநேரம், முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர 75 மில்லியன் ரூபாவையும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலாந்த ஜயவர்தன 75 மில்லியன் ரூபாவையும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் 2➤

## மண்சரிவு இடங்களை பார்வையிட செல்லவேண்டாமென எச்சரிக்கை !



அடுத்த சில நாட்களில் மழை பெய்யக் கூடும் என்பதால் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதி மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும், சந்தேகத்திற்கிடமான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அந்தப் பகுதிகளை விட்டு வெளியேறுமாறும், உடனடியாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்குமாறும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் இரத்தினபுரி மாவட்ட புவியியலாளர் அபித வனசுந்தர கேட்டுக்கொண்டுள்ளார்.

மண்சரிவு ஏற்பட்ட பகுதிகளைப் பார்வையிட அநேகமானோர் சிறு குழந்தைகளுடன் வருவதாகவும், அந்தப் பகுதிகளில் மண்சரிவு அபாயம் தொடர்ந்தும் நிலவுவதால் மக்கள் அந்த இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும் வனசுந்தர மேலும் கேட்டுக்கொண்டுள்ளார். (ரெந-28)

## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த நிலையில், வங்காள விரிகுடாவின் தென்மேற்குப் பிராந்தியத்தில் தாழமுக்கப் பிரதேசம் ஒன்று உருவாகியுள்ளதன் காரணமாக நாட்டிற்கு மேலாக, வளிமண்டலத்தின் கீழ் மட்டத்தில் தளம்பல் நிலையானது தொடர்ந்தும் நிலைகொண்டுள்ளதாக சிரேஷ்ட வானிலை அதிகாரி மொஹமட் சாலிஹீன் தகவல் பகிர்ந்துள்ளார்.

## ஈஸ்டர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஹேமசிறி பெர்னாட்டோ 50 மில்லியன் ரூபாவையும், பொலிஸ் அதிகாரி சிறிர மெண்டிஸ் 10 மில்லியன் ரூபாவையும் நட்ட ஈடாகச் செலுத்த வேண்டும் என உயர்நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தது.

அத்தோடு, அரசாங்கம் ஒரு மில்லியன் ரூபாவை நட்ட ஈடாக வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அரசாங்கமானது இந்தத் தொகையைச் செலுத்திவிட்டது. ஹேமசிறி பெர்ணான்டோ 5 மில்லியன் ரூபாவும், சிறிர மென்டிஸ் 10 மில்லியன் ரூபாவையும், பூஜித் ஜயசுந்தர 10 இலட்சத்து 72 ஆயிரத்து 588 ரூபாவையும், நிலந்த ஜயவர்த்தன 4.1 மில்லியன் ரூபாவையும் இதுவரை செலுத்தியுள்ளனர். 311 மில்லியன் ரூபா நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என உயர்நீதிமன்றினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், இதுவரை 3 கோடியே 68 இலட்சத்து 25 ஆயிரத்து, 88 ரூபா நிதி இவர்களினால் நட்டஈட்டு அலுவலகத்திற்கு கிடைத்துள்ளது. முழுமையான நிதி கிடைத்த பின்னர்தான், அதனைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான திட்டமிடல் ஒன்றும் நட்ட ஈட்டு அலுவலகத்தினால் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஸ்ரீலங்கா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த வழக்கு தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சரினால் தாக்கல் செய்யப்பட்ட மனு அழைக்கப்பட்ட போதே, அவர் இந்தத் தீர்மானத்தை அறிவித்துள்ளார்.

அண்மைய நாட்களில் விளையாட்டுத்துறை அமைச்சர், சில அமைச்சரவை உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நியாயமற்ற விமர்சனங்கள் காரணமாக இந்த விசாரணையில் இருந்து விலகத் தாம் தீர்மானித்தார் என்று தலைமை நீதியரசர் நிங்க பந்துல கருணாரத்ன அறிவித்துள்ளார்.

அதன்படி, இந்த மனு தொடர்பான விசாரணையை வேறு நீதியரசர்கள் ஆயத்துக்கு மாற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

## இஸ்ரேலுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதன்பின்னர், அந்த மகஜரின் பிரதி கொழும்பில் உள்ள பலஸ்தீன தூதுவருக்கும் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன், வீரசுமன வீரசிங்ஹ, பௌசி, ஹலீம், இம்ரான் ரஹ்மான், ஹரீஸ், தௌபீக் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் உடனிருந்தனர். (அ)

## சீன ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவர் இலங்கைக்குத் திடீர் விஜயம்



சீன ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவர் ஷென் யிகின் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என்று சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் சனிக்கிழமை சீன ஜனாதிபதியின் விசேட தூதுவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என்று சீன வெளிவிவகார அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

## உலக வங்கியின் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு விஜயம்!

உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5 வருடங்களில் இலங்கையின் சுகாதாரத் துறைக்கு எவ்வாறு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் கலந்துரையாடுவதற்காகவே குறித்த குழுவினர் வருகை தந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த குழுவினர் நேற்று கொழு-ம்பு - மாளிகாவத்தை சுகாதாரப் பிரிவுக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர் எனவும், குறித்த குழுவில் சுகாதார நிபுணர்களுடன் பொருளாதார நிபுணர்களும் உள்ளடங்கியுள்ளனர் என்றும் தகவல் கிடைத்துள்ளது.

## ஜெய்ஷா இலங்கைக் கிரிக்கெட்டினை அழித்துவிட்டார் - அர்ஜுன குற்றச்சாட்டு



இலங்கை கிரிக்கெட் சபையை இந்திய கிரிக்கெட் சபையின் செயலாளர் ஜெய்ஷாதான் வழிநடத்துகிறார் என்று இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஜெய் ஷாவின் தந்தை இந்தியாவின் உள்துறை அமைச்சராக இருப்பதால் ஜெய் ஷா பலம் வாய்ந்தவராக உள்ளார் என்றும், ஜெய் ஷாவின் செல்வாக்கால் இலங்கைக் கிரிக்கெட் அழிந்துவிட்டது என்றும் அர்ஜுன ரணதுங்க மேலும் கூறியுள்ளார்.

அர்ஜுன ரணதுங்கவின் இந்தக் கருத்திற்கு இந்திய செய்தித்தாள்களும் அதிக அளவில் முக்கியத்துவம் அளித்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெந-25)

## வாகன இறக்குமதிக்கு நிவாரணம் இல்லை!

இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை என இலங்கை மோட்டார் இறக்குமதியாளர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

டொலர் கையிருப்பு ஓரளவு அதிகரித்துள்ள நிலையில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு தேவையான வசதிகளை செய்து தருமாறு மத்திய வங்கியின் ஆளுனர் மற்றும் நிதி அமைச்சிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்ததாகவும் தெரிவித்துள்ளது. இதன்படி, இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் வாகன இறக்குமதிக்கான தடை தளர்த்தப்படும் என வாகன இறக்குமதியாளர்கள் எதிர்பார்த்த போதிலும் தமக்கு எவ்வித நிவாரணமும் கிடைக்கவில்லை என மோட்டார் இறக்குமதியாளர்கள் சங்கம் கூறியுள்ளது.

நான்கு வருடங்களாக வாகனங்கள் இறக்குமதி செய்யப்படாமையால் பாவனையாளர்களும் வாகன இறக்குமதியாளர்களும் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் இதனால் 400,000 இற்கும் அதிகமானோர் வேலையிழந்துள்ளதாகவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

ஆகவே, வரவு செலவுத் திட்டத்திற்குப் பின்னர் கட்டுப்பாடுகளுடனாவது வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்குமாறு மோட்டார் வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## கிளிநொச்சி மாவட்ட பெரும்போக விவசாயிகளுக்கு உர மானியம்

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போதைய பெரும்போகச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளில் 5,760 பேருக்கு மானிய உரத்திற்கான கொடுப்பனவுகள் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் தெரிவித்துள்ளார். அதாவது 2023–2024 காலபோகத்தில் விவசாயிகளுக்கு மானியமாக ஒரு ஹெக்டேயருக்கு 15,000 ரூபா வீதம் முதலாம் கட்டமாக கடந்த 10 ஆம் திகதி ஆம் திகதி 2,730 விவசாயிகளுக்கு மொத்தம் 2792.6463 ஹெக்டேயருக்கு 41,889,694.50 ரூபாவும் 13 ஆம் திகதி 3,030 விவசாயிகளுக்கு 3035.8627 ஹெக்டேயருக்கு 45,537,940.50 ரூபாவும் விவசாயிகளது வங்கிக் கணக்குகளுக்கு வைப்பிலிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (02)




## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட



காலைக்கதிர் TV
YouTube தளம்

# முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரிக்கு சஹாரா பவுண்டேஷன் கதிரைகள் உதவி



(ஹஸ்பர்)

கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரியின் அதிபர் எம். மன்சூர் அலி அவர்களின் வேண்டுகோளுக்கமைவாக, ராபிதா நளீமிய்யீன் பழைய மாணவர் அமைப்பு திருகோணமலை மாவட்ட பிராந்திய கிளை ஏற்பாட்டில் சஹாரா பவுண்டேஷன் அனுசரணையுடன் தி.கிண். முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரியின் பிரதான கேட்போர்கூடத்தின் பாவனைக்கு ஒரு தொகை கதிரைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரியின் அதிபர் எம். மன்சூர் அலி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ. நசூஹர் கான் (நளீமி), விசேட அதிதியாக முள்ளிப்பொத்தானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.கே.நசூர் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுச் செயலாளர் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எம்.ஐ. றிகாஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும், இந்நிகழ்வில் ராபிதா நளீமிய்யீன் பழைய மாணவர் அமைப்பின் திருகோணமலை மாவட்ட பிராந்திய கிளை தலைவர் அஷ்ஷெய்க் எம்.ரீ.எம். தாரிக் (நளீமி), அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் (நளீமி), அஷ்ஷெய்க் ஏ.ஆர். சஜீத் (நளீமி), அஷ்ஷெய்க் ஏ.ஜீ.எம். பஹீ (நளீமி), அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். அஸ்மீர் (நளீமி), அஷ்ஷெய்க் எம்.யூ. இம்தியாஸ் (நளீமி), அஷ்ஷெய்க் எம்.கே. இஹ்ஸான் (நளீமி) மற்றும் ஆசிரியர் எச். எம்.ஹனீஸ் ஆகியோரும் பங்கேற்றனர்.

# 32 வருடகால கல்விச் சேவை ஆசிரியர் நடேசலிங்கம் ஓய்வு



(வி.ரி.சகாதேவராஜா)

கல்விப் பணியில் 32 வருட காலம் சேவையாற்றிய காரைதீவைச் சேர்ந்த ஆசிரியர் தம்பியப்பா நடேசலிங்கம் தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்றார்.

அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயத்தில் 13 வருட காலம் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் அவர் பணியாற்றினார்.

அவருக்கான பிரியாவிடை வைபவம் அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயத்தில் அதிபர் ச.ரகுநாதன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. ஆளுயர மாலை சூட்டி, பிறந்த நாள் கேக் வெட்டி அவருக்கு பிரியாவிடை வைபவம் இடம்பெற்றது.

1990 இல் தலவாக்கலை சென்கூம்ஸ் வித்தியாலயத்தில் ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்த அவர்,

அதன் பின்பு மாளிகைக்காடு சபீனா வித்யாலயம், காரைதீவு பெண்கள் பாடசாலை ஆகியவற்றில் சிறப்பான சேவையாற்றினார்.

இவர் அவுஸ்திரேலியா ஒஸ்கார் நிறுவனம் மற்றும் சிட்னி உதயசூரியன் கல்வி மேம்பாட்டு நிலையம் போன்றவற்றினால் பல உதவிகளையும் இப்பிரதேசத்துக்கு பெற்றுக் கொடுத்துள்ளார். காரைதீவு விபுலானந்த பணி மன்ற நிருவாக சபை உறுப்பினராகவும் இவர் பணியாற்றி வருகிறார்.

# கொழும்பு சைவ மங்கையர் கல்லூரி மாணவிகள் தமிழ் மொழித்தின போட்டிகளில் பிரகாசிப்பு





(அஸ்ஹர் இப்றாஹிம்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையி லான தேசிய மட்ட தமிழ்மொழித்தினப் போட்டிகளில் கொழும்பு சைவ மங்கையர்கல்லூரி மாணவிகள் பங்குபற்றி மொத்தம் 32 பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

இசைக்குழு 1, இசைக்குழு 2, நாட்டிய நாடகம் என்பவற்றில் இரண்டாம் இடங்களையும், வாசிப்பு - பிரிவு 3, இசை தனி - பிரிவு 1 ஆகிவற்றில் மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

வெற்றி பெற்ற மாணவிகளுக்கும் நெறிப் படுத்திய ஆசிரியர்கள் திருமதிகள் தாரணி இராஜ்குமார், ஹம்சா பிரபாகர், ஷாலினி வாகீஸ் வரன், நிவாசினி சக்திவேல், அமுதினி மலர் செல்வன், திரு.இ.ஸ்ரீகாந், திரு வாசுதேவா ஆகியோருக்கு அதிபர் உள்ளிட்ட கல்வி சமூகத்தினர் வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

# அம்பாறை மாவட்ட சதுரங்கப் போட்டியில் 3 வருட தொடர் சம்பியனானார் முபீன்




(நூருல் ஹுதா உமர்)

இலங்கை செஸ் சம்மேளன ஏற்பாட்டில் தேசிய யூத் செஸ் சம்பியன்சிப் 2023 - போட்டிகள் அம்பாறை டீ. எஸ். சேனநாயக்கா தேசிய பாடசாலையில் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்றன.

இதில் சாய்ந்தமருது அல் - ஹிலால் வித்தியாலய மாணவி முபீன் பாத்திமா சபிலுல் லமாஹ் என்ற 9 வயது மாணவி, பெண்கள் பிரிவுச் சதுரங்கப் போட்டியில் வெற்றியீட்டினார். இவர் தொடர்ச்சியாக 3 வருடகாலமாக அம்பாறை மாவட்டச் சம்பியன் எனும் பட்டத்தைத் தக்கவைத்துள்ளார். இதில் 9 வயதுப் பிரிவின் கீழ் பங்கேற்று, அனைத்துப் போட்டிகளிலும் இவர் வெற்றியீட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த மாதம் கொழும்பில் நடக்கவிருக்கும் தேசிய மட்டப் போட்டிக்கு இவர் தெரிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதில் வெற்றி பெறுவோருக்கு தேசிய ரீதியிலும் சர்வதேச மட்டத்திலும் விளையாடக் கூடிய வாய்ப்புக்கள் கிடைக்கவுள்ளன.



# இஸ்ரேலின் குடியேற்ற நடவடிக்கைகளுக்கு கண்டனம் ஐ.நா.வின் 6 இல் 5 தீர்மானங்களுக்கு இந்தியா ஆதரவு!

ஆக்கிரமிப்பு பாலஸ்தீனப் பிராந்தியத்தில் இஸ்ரேலின் குடியேற்ற நடவடிக்கைகளுக்கு கண்டனம் தெரிவிப்பது உட்பட ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டுவரப்பட்ட 6 தீர்மானங்களில் 5 தீர்மானங்களுக்கு ஆதரவு தெரிவித்து இந்தியா வாக்களித்துள்ளது.

அதேவேளை, இஸ்ரேலின் மனித உரிமை மீறல் தொடர்பாக விசாரணை கோரும் தீர்மானத்தின் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் இந்தியா தவிர்த்தது.

பாலஸ்தீன பிரச்சினை உள்பட மத்திய கிழக்கு விவகாரங்கள் தொடர்பாக கடந்த நவம்பர் 9 ஆம் திகதி 6 தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. அரசியல் மற்றும் காலனியாதிக்கத்துக்கு எதிரான விவகாரங்களைக் கையாளும் ஐ.நா. சபையின் நான்காவது சிறப்புக் குழு, இந்தத் தீர்மானங்களை ஏற்றுக்கொண்டது.

அவற்றில் கிழக்கு ஜெருசலேம், சிரியாவின் கோலன் பிராந்தியங்களில் இஸ்ரேலின் குடியேற்றங்களுக்குக்



கண்டனம் தெரிவிக்கும் தீர்மானத்துக்கு இந்தியா, பிரான்ஸ், ஜப்பான் உள்பட 145 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன.

முன்னதாக, இஸ்ரேல்-ஹமாஸ் போரை மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக நிறுத்தக் கோரி அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் இந்தியா பங்கேற்கவில்லை.

சிரியாவின் கோலன் பிராந்தியத்தில் இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு தடைவிதித்தல், பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா.வின் நிவாரண செயல்பாடுகள், பாலஸ்தீன அகதிகளுக்கான உதவிகள், அந்த அகதிகளின் சொத்துகள், வருவாய் உள்ளிட்ட தீர்மானங்களுக்கும் ஆதரவு தெரிவித்து இந்தியா வாக்களித்தது.

அதே வேளையில், ஆக்கிரமிப்பு பிராந்தியங்களில் பாலஸ்தீனர்கள் மற்றும் பிற அரேபியர்களுக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொண்ட மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை சிறப்பு விசாரணை குழு விசாரிப்பது குறித்த தீர்மானத்துக்கு 85 நாடுகள் ஆதரவு அளித்த நிலையில், 13 நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தன. இந்தியா உள்பட 72 நாடுகள் இந்தத் தீர்மானத்தின் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. (04)

# சோமாலியாவில் பெய்த கன மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி 31 பேர் உயிரிழப்பு



சோமாலியாவின் பல்வேறு பகுதிகளில் பெய்த கன மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி 31 பேர் உயிரிழந்துள்ளனர்.


கடந்த ஒக்டோபர் மாதம் முதல் பெய்து வரும் கன மழையால் 12 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தங்களின் வசிப்பிடங்களை விட்டு வெளியேறி உள்ளனர்.

இந்த கன மழையால் தெற்கு சோமாலியாவின் கிடோ பகுதியில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டின் செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் தாவுடு அவைஸ் தெரிவித்தார்.

100 ஆண்டுகளில் இல்லாத அளவில் ஏற்பட்டுள்ள கன மழையால் பாதிக்கப்பட்டுள்ள சோமாலியா மக்களுக்கு நிவாரண உதவியாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகார அலுவலகம் 2.5 கோடி டொலரை வழங்கி உள்ளது.

மேலும், கன மழை குறித்து முன்னெச்சரிக்கையை விரைந்து அறிவித்திருந்தால் உயிர்ச் சேதம் குறைந்திருக்கும் என்றும் ஐ.நா. அமைப்பு தெரிவித்துள்ளது.

சோமாலியா கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கின் காரணமான அண்டை நாடான கென்யாவில் 15 பேர் உயிரிழந்துள்ளதாக கென்யா செஞ்சிலுவை தெரிவித்துள்ளது. (04)



# ஹைதராபாத் குடியிருப்புப் பகுதியில் தீ விபத்து 4 நாள் குழந்தை, பெண்கள் உட்பட 9 பேர் மரணம்

ஹைதராபாத்தில் உள்ள ஒரு குடியிருப்பு பகுதி யின் கீழ் தளத்தில் கார் மெக்கானிக் கடையில் நேற்று ஏற்பட்ட தீயில், பிறந்து 4 நாட்களே ஆன குழந்தை, 2 பெண்கள் உட்பட மொத்தம் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஹைதராபாத், நாம்பல்லி பஜார் காட் எனும் பகுதியில் 4 அடுக்குகள் கொண்ட குடியிருப்பு உள்ளது. இந்த வீட்டின் கீழ் தளத்தில் கார்களை பழுது பார்க்கும் மெக்கானிக் ஷெட் இயங்கி வந்தது. அதே இடத்தில், டீசல் மற்றும்ரசாயன பிளாஸ்டிக் பேரல்களையும் அதிகளவு சேமித்து வைத்துள்ளனர்.

இந்நிலையில், நேற்று காலை திடீரென இந்த மெக்கானிக் ஷெட்டில் தீ விபத்து ஏற்பட்டது. அப்போது அங்கு வைக்கப்பட்டிருந்த டீசல் மற்றும் ரசாயன பேரல்களில் தீப்பிடித்து மளமளவென மேலேயுள்ள அனைத்து மாடிகளுக்கும் கண் இமைக்கும் நேரத்துக்குள் பரவியது.

இதையடுத்து, மாடிகளில் வசித்து வந்த குடும்பத்தினர் பயந்து அலறி அடித்துக்கொண்டு கீழே வர முயற்சித்தனர். ஆனால், தீயுடன் கரும் புகையும் அதிகமாக வெளியேறியதால் அவர்களால் கீழே வர முடியவில்லை.

இச்சம்பவம் அறிந்து விரைந்து வந்த தீயணைப்பு படையினர் மாடியில் சிக்கி இருந்த 21 பேரைமீட்டு உஸ்மானியா அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவோரில் 8 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த கோர விபத்தில் அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த 6 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இதில், பிறந்து 4 நாட்களே ஆன ஆண் குழந்தையும் அடங்கும். இந்த தீ விபத்தில் மொத்தம் 9 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் சிலர் ஆபத்தான நிலைமையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதால், உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது. இந்த விபத்தில் பல வாகனங்களும் தீயில் கருகி நாசமாகின.

இச்சம்பவம் குறித்து போலீஸ் ஆணையர் வெங்கடேஸ்வருலு பேசுகையில், கார் திருத்தும் கடையில் ஏற்பட்ட தீயால்தான் இந்த விபத்து நடந்துள்ளது. மேலும், அதே கிடங்கில் யாருடைய அனுமதியும் இன்றி ரசாயனங்கள், டீசல் போன்றவை சேர்த்து வைக்கப்பட்டுள்ளன. அதனால்தான், தீ விரைவாக அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும் பரவியுள்ளது. இந்த விபத்து தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தப்படும், என்றார்.

விபத்து குறித்து அமைச்சர் கே.டி.ராமாராவ் கூறுகையில், நாம்பல்லியில் நடந்த கோரமான தீ விபத்து மிகவும் வருந்தத்தக்கது. இறந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கல்களையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இறந்தவர்களின் குடும்பத்துக்கு தலா 5 லட்சம் ரூபா நிதி உதவி வழங்கப்படும், என்று தெரிவித்தார். (04)

# பிரித்தானிய அமைச்சரவையில் அதிரடி மாற்றம் முன்னாள் பிரதமர் கமரூனுக்கு அமைச்சுப் பதவி

பிரித்தானியாவின் வெளியுறவுத் துறை அமைச்சராக முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். 2010 முதல் 2016 வரை பிரித்தானியப் பிரதமராகப் பதவி வகித்தவர் கமரூன்.

கமரூனின் நியமனம் அரசியல் பார்வையாளர்களிடையே பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது. நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இல்லாத ஒருவர் அமைச்சரவையில் இத்தகைய உயர் பதவியேற்பது மிகவும் அரிதானவொன்று. முன்னாள் பிரதமர் ஒருவர் மீண்டும் அமைச்சராக இணைவதும் நடந்து சில பத்தாண்டுகள் இருக்கலாம்.

தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அவசியமில்லாத மேலவையின் உறுப்பினராக டேவிட் கமரூன் நியமிக்கப்படுவார் என்று அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த ஜேம்ஸ் கிளவர்லி, பிரிட்டனின் புதிய உள்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட சுவெல்லா பிரேவர்மேனு-



க்கு பதிலாக உள்துறை அமைச்சராக்கப்பட்டுள்ளார் கிளவர்லி.

பாலஸ்தீன ஆதரவு பேரணிகளை கையாண்ட விதம் குறித்து விமரிசனம் செய்ததால், சுவெல்லா பிரேவர்மேனை உள்துறை அமைச்சர் பதவியிலிருந்து பிரதமர் ரிஷி சுனக் வெளியேற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (04)

# ஐக்கிய நாடுகளின் சமாதானத் தூதுவர் பேரவையின் உறுப்பினராக அஷ்–ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா அல்–காதிரி நியமனம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)


ஐக்கிய நாடுகள் சமாதானத் தூதுவர் பேரவையின் அங்கத்தவராக இலங்கை தேசிய ஐக்கியத்திற்கான சர்வமத கூட்டமைப்பின் முஸ்லிம் விவகார சம-தலைவர், அஷ்-ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரி நியமிக்கப்பட்டார்.

ஐக்கிய நாடுகள் சமாதானத் தூதுவர் பேரவையினால் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு அண்மையில் நடாத்தப்பட்டது.

சர்வதேச சமாதான மாநாடு ஐக்கிய நாடுகள் சமாதான தூதுவர் பேரவையின் தெற்கு ஆசிய செயலாளர் கலாநிதி ஹமிட் ஸைடின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், நியமனச் சான்றிதழை ஐக்கிய நாடுகள் சமாதான தூதுவர் பேரவையின் தெற்கு ஆசிய பிராந்திய சமாதானத் தூதுவர், பேராசிரியர் டொக்டர். ஜி. ஜெகப் ஸைமன் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், சமயத்தலைவர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சமாதான தூதுவர் பேரவையின் தெற்கு மற்றும் கிழக்கு ஆசியாவுக்கான இணைப்பாளர் கலாநிதி தேசமான்ய கே.ஏ.எஸ்.எம்.கே. ரத்னாயக உட்பட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

# இலங்கை வானொலி முஸ்லிம் சேவை நாடக கலைஞர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு



(ஹஸ்பர்)

இலங்கை வானொலி முஸ்லிம் சேவை நாடகங்களில் பங்கு கொள்கின்ற கலைஞர்களுக்கான பயிற்றுவிப்பு செயலமர்வு நேற்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பயிற்சி மையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது .

குறித்த பயிற்சி நெறியானது கதை வசனங்கள், பாத்திரங்களின் ஊடாக வானொலி நாடகத்தை வெளிக்கொணரல் என்ற தொணிப் பொருளில் மூன்று நாட்களைக் கொண்ட பயிற்சி நெறியாக நேற்று தொடக்கம் புதன்கிழமை வரை நடைபெற உள்ளது .

குறித்த பயிற்சி திட்டத்தில் 34 கலைஞர்கள் பங்குபற்றுகின்றனர். பிரதான வளவாளராக கலாநிதி ரஸ்மின் அவர்கள் கலந்துகொள்கின்றார்.

குறித்த பயிற்சித் திட்டத்தில் கலந்து கொள்கின்ற களைஞர்களுக்கு தொடர்ச்சியாக முஸ்லிம் சேவை நாடகங்களில் பங்குகொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என முஸ்லிம் சேவையின் பணிப்பாளர் திருமதி பாத்திமா றினூசியா தெரிவித்தார்.

குறித்த பயிற்சித் திட்டத்திற்கான நிதி உதவி, முஸ்லிம் சேவையின் பணிப்பாளர் திருமதி பாத்திமா றினூசியா மற்றும் சிரேஷ்ட தயாரிப்பாளர் ஏ.எம்.எம்.ரலீம் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கையில் சமூக ஒத்திசைவையும் சமாதானத்தையும் வலுப்படுத்துவதற்கான (ஸ்கோப்) செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

பயிற்சித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் ஸ்கோப் செயற்திட்டத்தின் கலை மற்றும் தொடர்பாடல் ஆலோசகரான ஏ.சீ.எம்.மாஹிர், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மகீன் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பயிற்சிப் பிரிவின் பணிப்பாளர் திருமதி லலனீ விக்கிரமராஜா, சிரேஷ்ட அறிவிப்பாளரும் கலைஞருமான திருமதி புர்க்கான் பி இப்திஹார் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.






# சமாதான விழிப்புணர்வு ஓவியப் போட்டி

(ஹஸ்பர்)

மூதூர் வலயக்கல்வி அலுவலகப் பிரிவிற்குற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான "சமாதான விழிப்புணர்வு ஓவியப் போட்டி" அண்மையில் தி.மூ.அல்ஹிதாயா மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த ஓவியப்போட்டியில் பல மாணவர்கள் ஆர்வத்தோடு கலந்துகொண்டிருந்தனர்.

# உலக நீரிழிவு தின விழிப்புணர்வு நடை பவனி நிந்தவூரில் இன்று



(நூருல் ஹுதா உமர் )

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு நிந்தவூர் ஆதார வைத்தியசாலையும், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் ஒழுங்கு செய்திருந்த விழிப்புணர்வு நடைபவனி இன்று நடைபெற்றது.

இந்நடைபவனியில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அதிகாரிகள், நிந்தவூர் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி, நிந்தவூர் ஜும்ஆ பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர், வைத்தியசாலை அதிகாரிகள், வைத்தியசாலை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இரத்தத்தில் சாதாரண அளவைவிட அதிகமாக குளுக்கோஸ் காணப்பட்டால் அது நீரிழிவு எனப்படும். தற்போது நீரிழிவு நோயின் தாக்கம் இலங்கையிலும், உலகளாவிய ரீதியிலும் அதிகரித்து வருகிறது. இந்நோயை முன்கூட்டியே இனங்கண்டு சிறந்த முறையில் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதை மூலம் ஆரோக்கியமாக வாழலாம் என்பதைத் தெரிவித்து நோயின் அறிகுறி, அதனால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அதைக் கட்டுப்படுத்தும் வகையிலான நடைமுறைகள், நீரிழிவு நோயாளிகளுக்கான சிபாரிசுசெய்யப்பட்ட உணவு வகைகள் எவை என்பது தொடர்பில் பிரசுரமொன்றும் இந்த நடைபவனியில் விநியோகிக்கப்பட்டது.

# எரிபொருள் மூலமான மின்சார உற்பத்தி பூச்சியமானது மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தகவல் தெரிவிப்பு

எரிபொருளைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வது கடந்த 12 ஆம் திகதியின் போது பூச்சியமாக குறைந்துள்ளதாக மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பொறியியலாளர் நோயல் பிரியந்த ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

நீர்மின் உற்பத்தியை அதிகப்படுத்தி எரிபொருளின் பயன்பாட்டை குறைக்க முயற்சி மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ள அவர், நீர்மின்சாரம் உற்பத்தி ஐம்பது சதவீதம் (52.34), நிலக்கரி 21.89 சதவீதம், சூரிய சக்தி 6.07 சதவீதம், காற்றாலை மின்சாரம் 4.67 சதவீதம், நீர்மின் நிலையங்கள் 14.1 சதவீதம் என மின்சார தேவையை பூர்த்தி செய்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் பராமரிப்புப் பணிகளுக்காக சுமார் 3 மாதங்களாக தொழிற்படாதிருந்த இயந்திரத்தின் திருத்தப்பணிகள் நிறைவடைந்த நிலையில் மீண்டும் மின்சாரம் உற்பத்தி செய்யும் வகையில் அந்த இயந்திரம் பிரதான கட்டமைப்பில் சேர்க்கப்படவுள்ளதாக ஆலை பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

முன்னதாக 540 மெகாவாட் மின்சாரத்தை தேசிய கட்டமைப்பில் சேர்க்க முடிந்ததுடன், தற்போது நீர்மின் உற்பத்தி அதிகரிப்பு காரணமாக சுமார் 460 மெகாவாட் மின்சாரம் சேர்க்கப்பட்டுள்ளதாக பொறியியலாளர்கள் தெரிவித்தனர். அதன்படி மூன்று இயந்திரங்களையும் இயக்குவதன் மூலம் 910 மெகாவாட் மின்சாரத்தை



தேசிய மின்கட்டமைப்பில் சேர்க்க முடியும் எனவும் பொறியியலாளர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (ரெந-22)

# சமாதான நீதிவானாக நியமனம்



யாழ் மாவட்டம் தென்மராட்சி மந்துவில்வடக்கு கொடிகாமத்தைச்சேர்ந்த கணேசபாலேந்திரன் கதிர்ச்செல்வன் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி திரு சூசைதாசன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை யா.மந்துவில் சிறிபாரதி வித்தியாலயம் மற்றும் இலுப்பைக்கடவை அ.த.க பாடசாலையிலும் உயர் கல்வியை மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியிலும் பயின்று, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடத்தில் பட்டப்படிப்பையும் நிறைவு செய்து, யாழ் மாவட்டச் செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணிபுரிந்துவருகிறார்.

# திருகோணமலை தாழ் நிலப்பிரதேசங்களில் தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின



(எம்.ஏ.ஏ.அக்தார்)

திருகோணமலையில் கடந்த சிலநாட்களாக பெய்து வரும் காற்றுடன்கூடிய மழையின் காரணமாக பல தாழ் நிலப்பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வெருகல் ஊப்பூரல் கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆறு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ் தெரிவித்தார்.

மேலதிக சேதங்கள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் திருகோணமலை நகரை அண்மித்த கன்னியா பீலியடிப் பகுதி உட்பட பல பகுதிகளில் வெள்ள நீர் உட்புகுந்துள்ளததன் காரணமாக பல வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வடிகான் அமைக்கப்படாததன் காரணமாக வெள்ள நீர் வீட்டுக்குள் புகுந்துள்ளதாகவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பலமுறை தெரிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படவில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# உயிரியல் பூச்சிகொல்லி உருவாக்க தொழிநுட்ப உரிமம் செரண்டிப் ஓகானிக் – தென் கிழக்குப் பல்கலை ஒப்பந்தம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக இணைப்பு (தொழில்நுட்பப் பரிமாற்ற அலுவலகம்) செரண்டிப் ஓகானிக் ஹோல்டிங் நிறுவனத்துடன் தொழில்நுட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.என்.டீ.என்.குமார அவர்களினால் கண்டுபிடிக்கப்பட்ட உயிரியல் பூச்சி கொல்லி உருவாக்கத்திற்கான தொழிநுட்ப உரிமத்தில், தென்கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் முன்னிலையில் அண்மையில் கையெழுத்திடப்பட்டது.

இது தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் மற்றுமொரு வெற்றிகரமான ஒப்பந்தமாகும். பசுமைப் பூச்சி மேலாண்மையில் பல்கலைக்கழக தொழில்துறை ஒத்துழைப்பை மேம்படுத்துவதனை இச்செயற்பாடு நோக்கமாகக் கொண்டது.

நவீன அறிவு, நிபுணத்துவம், பயிற்சி, வணிகமாக்கல் முயற்சிகள், விவசாயச் செயன்முறைகளை மேம்படுத்துதல் மற்றும் விவசாயிகளின் பொருளாதார மட்டத்தை பிராந்திய மட்டத்தில் ஊக்குவித்தல் போன்ற செயற்பாடுகளுக்கு இது பெரிதும் துணை புரியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.





# இந்தியாவிலிருந்து இறக்குமதியான முட்டைகள் பழுதடைந்தவையா? எந்தவொரு புகாரும் வரவில்லை என்கிறார் சதொசவின் தலைவர்

இதுவரை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 9 லட்சத்துக்கும் அதிகமான முட்டைகள் விற்பனையாகியுள்ள நிலையில், முட்டைகள் பழுதடைந்து போனதாகவோ, அவற்றை உட்கொண்டதில் உடல் பாதிப்புகள் ஏற்பட்டதாகவோ எழுத்து மூலமாகவோ, வாய்மொழியாகவோ ஒரு புகார் கூட கிடைக்கப் பெறவில்லை என சதொச தலைவர் பசந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

சில சதோச விற்பனை நிலையங்களில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் பழுதடைந்துள்ளதாக வாடிக்கையாளர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் குறித்து கேட்டபோதே சதொச தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இந்திய முட்டைகளை நான்கு நாட்களுக்கு வெளியே வைக்கலாம் என இலங்கை ஜெனரல் டிரேடிங் நிறுவனம் எழுத்துப்பூர்வமாக தெரிவித் திருந்த போதிலும், சதொச விற்பனை நிலையங்களில் குளிர்ச்சித் தன்மை கொண்ட போத்தலில் அவற்றை அடைத்து வைப்பதாகவும் அபேவர்தன தெரிவித்தார்.

வாடிக்கையாளர்கள் கொள்வனவு செய்யும் முட்டைகளில் பழுதடைந்துள்ள முட்டைகள் இருப்பின் கொள்வனவு செய்யப்பட்ட திகதி மற்றும் பற்றுச்சீட்டுடன் சம்பந்தப்பட்ட சதொச விற்பனைநிலையத்திற்கு முறைப்பாடு செய்யலாம் அல்லது 1998 என்ற இலக்கத்திற்கு அறிவிக்கலாம் எனவும் தலைவர் தெரிவித்தார்.

முட்டைகள் கொண்டு செல்லப்பட்டு விற்பனை நிலையங்களில் இறக்கியதும், அவற்றை பொதியிடல் செய்ய சில மணி நேரங்கள் செல்வதாகவும், மாதந்தோறும் 9, 10, 11, 23, 24 மற்றும் 25 ஆகிய ஓய்வூதியம் மற்றும் சம்பளம் வழங்கப்படும் திகதிகளில் அதிகளவில் முட்டைகள் விற்பனை நிலையங்களுக்கு விநியோகம் செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ரெந-24)

## அதிகரிக்கப்பட்ட உதவித்தொகையை ஓய்வு பெற்ற கலைஞர்களுக்கும் வழங்கவேண்டுமென மூத்த திரைப்பட இயக்குநர் உதயகாந்த கோரிக்கை



2024 வரவு செலவுத் திட்டம் மூலம் அதிகரிக்கப்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கான உதவித்தொகையை, ஓய்வு பெற்ற மூத்த நடிகர், நடிகைகள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் வழங்க வேண்டும் என மூத்த திரைப்பட இயக்குனரும் தயாரிப்பாளருமான உதயகாந்த வர்ணசூரிய தெரிவித்துள்ளார்.

மேலும், திரையுலகின் மூத்த கலைஞர்கள் பலர் நீண்ட காலமாக ஓய்வு ஊதியம் பெற்று வருவதாகவும், ஆனால் இது வரை உதவித்தொகை உயர்த்தப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

இந்நிலையில் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் சிரேஷ்ட பிரஜைகளுக்கான கொடுப்பனவை அதிகரிக்க முன்மொழியப்பட்டதாகவும், அவ்வாறே சிரேஷ்ட சினிமாக்காரர்களுக்கு அக்கொடுப்பனவு அதிகரித்து வழங்கப்படும் என தாம் நம்புவதாகவும் உதயகாந்த வர்ணசூரிய மேலும் தெரிவித்தார். (ரெந-26)

## பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்கள் குறித்து ஆராய்வு



பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சேவையில் ஈடுபடும் அநேகமான தனியார் பஸ்கள் மற்றும் வேன்கள் ஆகியன பொது போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட பின்னரே மாணவர்களுக்கான சேவையில் ஈடுபடுவதாக தெரியவந்துள்ளதாகவும் அதன் காரணமாக பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்களின் தரம் குறித்து துல்லியமான கணக்கெடுப்பொன்றை மேற்கொள்ள கொழும்பு போக்குவரத்து தலைமையக பணிப்பாளர் மனோஜ் ரணகல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

ஏற்கனவே இது தொடர்பான கணக்கெடுப்பு கொழும்பில் மேற்கொள்ளப்பட்டு தரமற்ற வேன்கள் மற்றும் பஸ்கள் குறித்து தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது, மோட்டார் வாகன திணைக்கள ஆணையர் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுவதுடன் தடைக்கு உள்ளாகும் வாகனங்களின் கோளாறுகள் சீர்செய்யப்பட்டவுடன் அவை மீண்டும் பாடசாலை சேவையில் ஈடுபட அனுமதிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ரெந-27)



## மொட்டு கட்சியின் 2 ஆம் மாநாடு டிசம்பரில் நடத்த பலத்த ஏற்பாடு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் 02 ஆவது பொது மாநாடு கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அடுத்த மாதம் டிசம்பர் 15 ஆம் திகதி சுகததாஸ உள்ளரங்கில் பிரமாண்டமாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாட்டில் அக்கட்சியின் சகோதர கட்சிகள் மற்றும் அதனுடன் இணைந்த அமைப்புக்களும் பங்கேற்கவுள்ளன. (ரெந-23)

## ஒவ்வொரு தோட்டத் தொழிலாளர் குடும்பத்திற்கும் சொந்த நிலம் கிடைக்கும் - அமைச்சர் ஜீவன் உறுதி



தோட்டத்தொழிலார்களுக்கு அரசாங்கம் இலவச காணிகளை வழங்குவதாக அறிவித்துள்ளமையை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் வரவேற்றுள்ளார்.

இதற்காக 4 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் விரைவில், ஒவ்வொரு தோட்ட தொழிலார் குடும்பத்திற்கும் சொந்த நிலம் கிடைக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் 2024 ஆம் ஆண்டிற்கான 10 பில்லியன் ஒதுக்கீட்டின் மூலம், மலையகத்தின் வாழ்க்கைத் தரம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும், நுவரெலியா மாஸ்டர் டெவலப்மென்ட் திட்டத்தின் ஒரு பகுதியாக நுவரெலியாவில் புதிய பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, கொத்மலையில் உள்ள காலநிலை மாற்ற பல்கலைக்கழகத்துடன் இணைந்து, நுவரெலியா மாவட்டத்தில் விரைவில் இரண்டு பல்கலைக்கழகங்கள் தொடங்கப்படும் என்றும், கண்டியில் அமைக்கப்படவுள்ள புதிய தொழிநுட்ப பல்கலைக்கழகத்தோடு மத்திய மாகாணம் விரைவில் உயர்கல்வியின் மையமாக மாறும் என்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

# சில்லறை வரவு செலவுத் திட்டத்தையே முன்வைத்துள்ளதாக சஜித் குற்றச்சாட்டு!

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வரவு செலவுத் திட்டம் ஆட்சியாளர்களுக்கு தெய்வீக உலகத்தையும் மக்களுக்கு நரகத்தையும் காட்டியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணையைப் பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் ஜனாதிபதி சில்லறை வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் வரவு செலவுத்திட்ட உரையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், இந்த வருட வரவு செலவு திட்டம் நாட்டு மக்களை ஏமாற்றும் நடவடிக்கை என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக மக்களின் வாழ்வாதாரத்தை பலப்படுத்தும் வேலைத்திட்டம் பற்றி பேசுவதற்கு முன்னர் 2022 வரவு செலவு திட்ட பிரேரணையின் உள்ளடக்கங்கள் எந்தளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை ஆராய வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.11.2023இல் வெளியிடப்பெற்றது.